பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

30 10 2025 THURSDAY 6.30 PM

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. நாடு முழுவதும் 76 ரயில் நிலையங்களில் கூடுதல் இடவசதிகளுடன் பயணியர் காத்திருப்பு மையங்களை ஏற்படுத்த மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

2. நகராட்சி நிர்வாக பணி நியமனங்களில் நடைபெற்றுள்ள ஊழல் குறித்து சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வலியுறுத்தியுள்ளார்.

3. நெல் கொள்முதல் தொடர்பாக திமுக அரசு முன்னுக்குப்பின் முரணான தகவல்களை தெரிவிப்பதாக அஇஅதிமுக குற்றம் சாட்டியுள்ளது.

4. நீதிமன்றத்தை அரசியல் மேடையாக பயன்படுத்த அனுமதிக்க முடியாது என்று சென்னை உயர்நீதிமன்றம் திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

5. ஆசிய இளையோர் விளையாட்டுப்போட்டிகளில் இந்தியா இன்று 6 தங்கப்பதக்கங்களை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>

நாடு முழுவதும் 76 ரயில் நிலையங்களில் கூடுதல் இடவசதிகளுடன் பயணியர் காத்திருப்பு மையங்களை ஏற்படுத்த மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் இதற்கான ஒப்புதலை வழங்கியுள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

அடுத்த ஆண்டு பண்டிகை காலத்திற்கு முன்பாக இதற்கான பணிகளை பூர்த்தி செய்யுமாறு அமைச்சர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளதாக அதில் கூறப்பட்டுள்ளது.

புதுதில்லி ரயில் நிலையத்தில் கூட்ட நெரிசலை எதிர்கொள்வதற்கு ஏதுவாக ஏற்படுத்தப்பட்ட இந்த வசதி, தற்போது இதர ரயில் நிலையங்களுக்கும் விரிவுபடுத்தப்பட உள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சென்னை சென்டரல், எழும்பூர் மற்றும் கோவை ரயில் நிலையங்கள் இந்த பட்டியலில் இடம்பெற்றுள்ளன.

<<<<<>>>>>

நகராட்சி நிர்வாக பணி நியமனங்களில் நடைபெற்றுள்ள ஊழல் குறித்து சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தை புறக்கணித்துவிட்டு அண்ணா பல்கலைக்கழகத்தின் உதவியுடன் குறுக்கு வழியில் பணியாளர்களை தேர்வு செய்ததில் பலகோடி ரூபாய் லஞ்சம் கைமாறியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அரசுப்பணிக்கான நியமனங்களிலும் திமுக-வினர் விஞ்ஞான ரீதியில் ஊழல் புரிந்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இதனமூலம், இளைஞர்களின் எதிர்காலத்தை திமுக அரசு சிதைத்துள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

தமிழகத்தையே அதிர வைத்துள்ள இந்த பணி நியமன ஊழல் வழக்கை தமிழக காவல்துறை விசாரித்தால் நியாயம் கிடைக்காது என்றும் டாக்டர் எல். முருகன் அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

<<<<<>>>>>

வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப்பணிகள் குறித்து தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக், மாவட்ட ஆட்சியர்களுடன் காணொலி வாயிலாக இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

இந்த கூட்டத்தில், இப்பணிகளை திறம்பட மேற்கொள்வது குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>

பொருளாதார வளர்ச்சியில் தமிழகம் முன்னணியில் உள்ளதாக சட்டப்பேரவை துணைத்தலைவர் திரு பிச்சாண்டி கூறியுள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டம் கோணலூர் ஊராட்சியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், அரசு திட்டங்களின் பலன்கள் அனைவரையும் சென்றடைய வேண்டும் என்ற நோக்கில் தமிழக அரசு செயல்பட்டு வருவதாக கூறினார்.

<<<<<>>>>>

நெல் கொள்முதல் தொடர்பாக திமுக அரசு முன்னுக்குப்பின் முரணான தகவல்களை தெரிவிப்பதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று மதுரையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஆண்டுதோறும் சராசரியாக 42 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்படுவதாக முதலமைச்சர் கூறியிருப்பதை சுட்டிக்காட்டினார்.

ஆனால் திமுக அரசு பொறுப்பெற்ற பின்னர் சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட உணவுத்துறை மானியக்கோரிக்கையின்போது, தெரிவிக்கப்பட்ட தகவலின்படி, கடந்த நான்கு நிதியாண்டுகளாக ஒரு கோடியே 15 லட்சத்து 49 ஆயிரம் மெட்ரிக் டன் நெல்தான் கொள்முதல் செய்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

இதில் எந்த தகவல் உண்மை என்பது குறித்து முதலமைச்சர் விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் திரு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

<<<<<>>>>>

பச்சை வாளியம்மன் கோவிலை கையப்படுத்தும் திட்டத்தை திமுக அரசு கைவிட வேண்டும் என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கடலூர் மாவட்டத்தில் உள்ள இந்த கோவிலை இந்து சமய அறநிலையத்துறை எடுத்துக்கொள்வதற்கு எதிராக போராடியவர்களை திமுக அரசு கைது செய்திருப்பது அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது என்று கூறியுள்ளார்.

இதுகுறித்து சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் திரு நயினார் நாகேந்திரன் அந்த அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<>>>>>

நீதிமன்றத்தை அரசியல் மேடையாக பயன்படுத்த அனுமதிக்க முடியாது என புதிய குற்றவியல் சட்டங்களை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணையின்போது சென்னை உயர்நீதிமன்றம் திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

இவ்வழக்குகளை விசாரணை செய்த தலைமை நீதிபதி திரு எம் எம் ஸ்ரீவஸ்தவா, நீதிபதி திரு அருள்முருகன் அமர்வு, உரிய காரணங்கள் இன்றி இந்த சட்டங்களை எதிர்த்து எவ்வாறு வழக்கு தொடுக்க இயலும் என்று வினவியது.

இந்த காரணங்களை கூறி, சட்டம் இயற்றும் தகுதியை எதிர்க்க முடியாது என கூறிய நீதிபதிகள், இவ்வழக்கின் விசாரணையை அடுத்த மாதம் 3-ஆவது வாரத்திற்கு ஒத்திவைத்தனர்.

<<<<<>>>>>

தமிழகத்தில் அடுத்த ஐந்து தினங்களுக்கு வறண்ட வானிலையே நிலவக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவிததுள்ளார்.

எமது யெ்தியாளரிடம் பேசுகையில அவர் இவ்வாறு கூறினார்.

<<<<<>>>>>

## *<u>மாவட்டச் செய்திகள்</u>*

கன்னியாகுமரி மாவட்டம் சுசீந்திரத்தில் உள்ள அருள்மிகு தாணுமாலய சுவாமி கோவிலில் மாநில ஆளுநர் திரு ஆர் என் ரவி இன்று சுவாமி தரிசனம் செய்தார்.

-------------

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் பசுமைக்குழு கூட்டம் ஆட்சியர் திரு பிரசாந்த் தலைமையில் இன்று நடைபெற்றது.

----------------

கோவை மாவட்டம் வால்பாறைக்கு செல்ல அடுத்த மாதம் ஒன்றாம் தேதிமுதல் இ-பாஸ் கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக ஆட்சியர் திரு பவன்குமார் அறிவித்துள்ளார்.

-----------------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் சிறந்த இலக்கியப் படைப்புகளுக்கு உதவித்தொகை பெற அடுத்த மாதம் 28-ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்குமாறு ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் கேட்டுக்கொண்டுள்ளார்.

-------------

நாமக்கல் மாவட்டம் நாமகிரிப்பேட்டை ஊராட்சி ஒன்றியப்பகுதிகளில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் இன்று நடைபெற்றது.

-------------

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணத்தில் தேசிய பேரிடர் மீட்புப்படையினர் சார்பில் உடல் ஆரோக்கியம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

-------------------

விழுப்புரம் மாவட்டத்தில் சட்டப்பணிகள் ஆணையக்குழுவின் சார்பில், சட்ட விழிப்புணர்வு கண்காட்சி இன்று நடைபெற்றது.

-------------

அரியலூர் மாவட்டத்தில் குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறை சார்பில், அலுவலர்கள் பங்கேற்ற ஆய்வுக்கூட்டம் இன்று நடைபெற்றது.

-------------

வேலுர் மாவட்டம் பேரணாம்பட்டு அருகே கர்நாடகாவிலிருந்து கார்களில் கடத்தி வரப்பட்ட மூன்று லட்சம் ரூபாய் மதிப்பிலான போதைப்பொருட்களை காவல்துறையினர் பறிமுதல் செய்து, இரண்டு பேரை கைது செய்தனர்.

-------------

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் மலர் சந்தையில் பூக்களின் விலை அதிகரித்துள்ளது.

------------

தென்காசி மாவட்டம் அடவிநயினார் அணை நடப்பாண்டில் நான்காவது முறையாக அதன் முழு கொள்ளளவை எட்டியது.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய இளையோர் விளையாட்டுப்போட்டிகளில் இந்தியா இன்று 6 தங்கம், 3 வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

பக்ரைனில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் குத்துச்சண்டை 46 கிலோ எடைப்பிரிவில் Khushi Chand-ம், 50 கிலோ எடைப்பிரிவில் Ahaana Sharma-வும், 54 கிலோ எடைப்பிரிவில் Chandrika Pujari -வும் தங்கப்பதக்கம் வென்றனர்.

பீச் மல்யுத்த போட்டியில் Sani Subhash, Arjun Ruhil, Anjali ஆகியோர் தங்கப்பதக்கத்தையும், Ravinder மற்றும் Sujay Tanpure வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.

ஆடவர் குத்துச்சண்டை போட்டியின் 50 கிலோ எடைப்பிரிவில் Moibungkhongbam Singh வெள்ளிப்பதக்கம் வென்றார்.

இப்போட்டியில் இந்தியா, இதுவரை 12 தங்கம், 16 வெள்ளி, 14 வெண்கலப்பதக்கங்களுடன் பதக்கப்பட்டியலில் 6-ஆவது இடத்தில் உள்ளது.

--------------

உலகக்கோப்பை பாரா துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்தியா இன்று ஒரு தங்கம், இரண்டு வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

ஐக்கிய அரபு எமிரேட்டின் Al Ain-ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் பத்து மீட்டர் பிரிவில் Manish Narwal தங்கப்பதக்கத்தையும், Angrez Singh வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.

மகளிர் 50 மீட்டர் பிரிவில் Avani Lekhara வெள்ளிப்பதக்கம் வென்றார்.

---------------

ஹைலோ ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் லக்ஷயா சென் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 21-14, 21-13 என்ற செட் கணக்கில், இந்தியாவின் சங்கர் சுப்பிரமணியனை வென்றார்.

---------

உலகக்கோப்பை செஸ் போட்டி கோவாவில் இன்று தொடங்குகிறது.

------------

பெங்களூவில் இன்று தொடங்கிய இந்தியா ”ஏ” அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் ஆட்டநேர இறுதியில் தென்னாப்பிரிக்கா ”ஏ” அணி முதல் இன்னிங்சில் 9 விக்கெட் இழப்பிற்கு 299 ரன் எடுத்துள்ளது.

<<<<<>>>>>